ஒம் 25.04.22

**திருச்சிராப்பள்ளி முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர்: திரு ர.பாலமுரளி.,எம்.ஏ .,பி எட்**

**ந.க.எண் : 02820 / அ1 / 2021 நாள் : .04.2022**

**பொருள் :** பள்ளிக்கல்வித்துறை – பொதுப்பணிகள் – கருணை அடிப்படையில் நியமனம் – பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் – திரு.சு.பிரகாசம் என்பவரின் வாரிசுதாரர் – திரு.பி.முருகராஜ், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு.

**பார்வை :**
1. திருச்சிராப்பள்ளி மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் : 1158/அ1/2016 நாள் : 06.06.2017
2. அரசாணை (நிலை) எண்:48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் : 26.02.2021
3. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.21925/ஜே/இ4/2021 நாள்.09.04.2021.
4. திருச்சிராப்பள்ளி மாவட்டக்கல்வி ந.க.எண்.276/அ1/2022 நாள்.21.03.2022

-------

திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராக பணிபுரிந்து பனிக்காலத்தில் 10.06.2010 அன்று காலமான திரு. சு.பிரகாசம் என்பவரின் வாரிசுதாரர் திரு.பி.முருகராஜ், என்பவருக்கு பார்வை 1–ல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக அழககவுண்டன்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியில் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு 07.06.2017 முற்பகல் முதல் பணியேற்று பின்னர் மாறுதலில் தொட்டியம், அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 12.03.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 2–ல் காணும் அரசாணை பத்தி 5.1 மற்றும் 5.2ல் கீழ்க்காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5.1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைபடுத்தப்பட வேண்டும்.

Scanned with OKEN Scanner

(5.2) பத்தி 5.1ல் உள்ள ஆணையினை செயல்படுத்த, சமத்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One Level higher than the Appointing Authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரைமுறைசெய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசு பணியாளர்களின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்படவேண்டம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தனியருக்கு எந்தவித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் பார்வை 2-ல் காணும் அரசாணையின்படியும் பார்வை 4-ல் காணும் நியமன அலுவலரின் பரிந்துரையின் பேரில் திரு. பி.முருகராஜ் என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக நியமனம் பெற்ற நாளான 07.06.2017 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

மேற்படி திரு.பி.முருகராஜ் என்பார் இளநிலை உதவியாளராக பணிவரன் முறை நாள் முதல் மூன்றாண்டு கால தொடர் பணியில் இரண்டாண்டு காலத்தில் தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக முடிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறார். தகுதிகாண் பருவ காலத்தில் மேற்படி தனியர் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் குறிப்பிட்ட தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்வு பெற வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

மேலும் தனியரின் கருணை அடிப்படையிலான பணியினை வரன்முறைப்படுத்தப்பட்டமைக்கு அரசு அளவில் பதிவு / இசைவு பெற ஏதுவாக நடைமுறையில் உள்ளவாறு கருத்துரு தயார் செய்து அசல் + நகல் இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக்கல்வி அலுவலர்,
திருச்சிராப்பள்ளி

12/4/2022

பெறுநர் :

திரு.பி.முருகராஜ்,
இளநிலை உதவியாளர்,
அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
தொட்டியம்.

நகல் :

1. மாவட்ட கல்வி அலுவலர் , திருச்சிராப்பள்ளி
2. தலைமையாசிரியர் – அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, தொட்டியம்.
3. கருத்துருவிற்கு,
4. உபரி

Scanned with OKEN Scanner